30.04.2024

O.S.No.253/2022

வா.சா.1.திரு. திருமணி த.பெ.முருகேசன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1.தாவா சொத்து முழுவதும் வாதிகளாகிய எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று தான் நாங்கள் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் மற்றும் சீர்திருத்த பத்திரத்தினை பற்றி நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணமானது எனது சகோதரியான 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கு சொத்தினை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணமான 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தினையும், 15.06.2021 தேதியில் ஏற்பட்ட சீர்திருத்த பத்திரத்தினையும் இந்த வழக்கில் எனது தரப்பு ஆவணங்களாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 2 ஆவணங்களும் இல்லா நிலையானது மற்றும் செல்லதக்கதல்ல என்று கூறி நான் ஏதாவது பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணம் மற்றும் சீர்திருத்த பத்திரம் இருப்பதனை தெரிந்துகொண்ட பின்பும் தாவாசொத்தில் எனது உரிமையை விளம்புகைசெய்வதற்கு விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ-2 ஆவணத்தில் 6வது அயிட்ட சொத்து காளிகாப்பான் 1ம் பிட் கட்டுப்பட்ட சொத்து என காணப்படுகிறது என்றால் சரிதான். நான் இந்த பிராதில் காட்டியுள்ள சொத்து விவரமானது காளிகாப்பான் 2ம் பிட் கட்டுப்பட்ட சொத்து என காணப்படுகிறது என்றால் சரிதான். நான் தாவாசொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 ஆவணங்களில் காணப்படவில்லை என்றாலும், அவ்வாறு காணப்படுவதாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. மாவட்ட பதிவாளர் அவர்கள் பிறப்பித்த உத்தரவில் சம்பந்தபட்ட பிரச்சினை உரிமையியல் பிரச்சினையாக இருப்பதால் சிவில் நீதிமன்றத்தினை அணுக வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால், அவ்வாறும் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ-1 பாகபிரிவினை ஆவணமானது சொத்துரிமை மாற்று சட்டத்தின் கீழ் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய ஆவணம் என்றால் சரியல்ல. பதிவு சட்டத்தின் கீழ் வா.சா.ஆ-1 ஆவணம் கட்டாயமாக பதிவுசெய்யப்பட வேண்டிய ஆவணம் என்றாலும், அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை என்பதால் அந்த ஆவணத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ-1 ஆவணத்திற்கு முறையாக முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முறையாக முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதால் வா.சா.ஆ-1 ஆவணம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாத ஆவணம் என்றால் சரியல்ல. எனது சகோதர் ஜோதிமணியின் மக்களுக்கு எனது தகப்பனார் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் சொத்துக்களை

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட சொத்து பரிமாற்றத்தினை பற்றி எனது தந்தை சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் வா.சா.ஆ-1 பாகபிரிவினை ஆவணத்தினை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தினை நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து எங்கள் குடும்ப சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணம் எந்த விதத்திலும் சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதியின் மகளை எனது மகனுக்கு திருமணம் முடித்துள்ளேன் என்றால் சரிதான், எனது மருமகளின் பெயர் என்ன என்றால் சத்வரூபா ஆகும். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி அவரது மகளும், எனது மருமகளுமான சத்வரூபா என்பவருக்கு தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பிரிவினை இல்லாத 1/3 பாகம் சொத்தினை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனார் முருகேசன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவ்வாறு ஆவணம் எதுவும் ஏற்படுத்தாமல் இருந்திருந்தால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவரது மக்களான எங்கள் அனைவருக்கும் சமமான கூட்டு பாத்தியம் உண்டு என்றால் சரிதான். முருகேசனின் சொத்தினை பொறுத்து அவர் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதால் 1ம்பிரதிவாதி அவரது மகள் என்ற அடிப்படையில் 1/3 பாக சொத்தினை அடைந்து அந்த சொத்தில் 2ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அவருக்கு உரிமையில்லாத சொத்தினை கிரையம் கொடுத்துள்ளார்.

5. 1ம் பிரதிவாதிக்கு உரிமையில்லாத சொத்தினை கிரையம் கொடுத்ததாக இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், அதை நிரூபிக்கும் வண்ணம் எனது தரப்பில் போதிய சான்றுகள் முன்னிலைபடுத்தவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு அவரது தந்தை சொத்தில் இருந்து கிடைத்த 1/3 சொத்தில் பகுதியை 2ம்பிரதிவாதிக்கும் பகுதியை அவரது மகளும், எனது மருமகளுமான சத்வரூபா என்பவருக்கும் எழுதி வைத்துள்ளதால் மேற்படி சத்வரூபாவிற்கு எழுதிவைத்த சொத்தினை பொறுத்து ஆட்சேபிக்காமல், 2ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தினை பொறுத்து மட்டும் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல, அது குறித்து நான் தனியாக நடவடிக்கை எடுத்து மாவட்ட பதிவாளரிடம் நடவடிக்கை முடிந்து அதற்கு மேல் நடவடிக்கை நிலுவையில் உள்ளது. அவ்வாறு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்பதனை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். அவ்வாறு எந்த நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்திற்கு எனது பெயரிலும், 1ம்பிரதிவாதி பெயரிலும் கூட்டாக பட்டா ஏற்பட்டதா என்றால் சரிதான். வா.சா.ஆ-1 பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்ட காலத்தில் எங்களுக்குள் தனித்தனியே பட்டா எதுவும் மாற்றிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ-1 ஆவணம் பின்னிட்டு

உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் வா.சா.ஆ-1 ஆவணம் ஏற்பட்டதாக சொல்லப்படும் 1995 கால கட்டங்களில் நாங்கள் பட்டா மாற்றிக்கொள்ள இயலவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்தினை கிரையம் பெற்ற உடன் என்னுடன் சேர்ந்து கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டதை ரத்து செய்யப்பட்ட பிறகு தற்போது மீண்டும் எனது தந்தை பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அந்த கூட்டுபட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் மாண்பமை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.80/2011 வழக்கு நிலுவையில் இருந்த போது அந்த வழக்கினை மறைத்து கூட்டுப்பட்டா வாங்கியதால் அந்த கூட்டுப்பட்டா ரத்து செய்யப்பட்டது.

7. நான் அரசு துறையில் மிக முக்கிய பொறுப்பினை வகித்து வந்ததால் எனது செல்வாக்கினை பயன்படுத்தி அசல் வழக்கு எண்.80/2011ல் சம்பந்தமில்லாத சொத்தினை காட்டி அந்த கூட்டுப்பட்டாவினை நான் ரத்து செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல, அந்த சொத்து அந்த வழக்கில் சம்பந்தபட்ட சொத்துதான். அசல் வழக்கு எண்.80/2011ல் தாவா சொத்தான சர்வே எண்.36/2A மற்றும் சர்வே எண்.36/2B2 ஆகியவை காணப்படுகிறதா என்றால் அதன் பழைய சர்வே எண்.36/5B என 6வதுஅயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.36/5B தான் தற்போதைய தாவா சொத்து என இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.36/5B தான் தற்போது தாவா சொத்தான சர்வே எண்.36/2A மற்றும் 36/2B2 என்பதற்கு கார்லேசன் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. 1ம் பிரதிவாதி தனக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்ட சொத்தில் பகுதியை 2ம் பிரதிவாதிக்கும், பகுதியை அவரது மகளும், எனது மருமகளுமான சத்வரூபா என்பவருக்கும் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டதாலும், அவருக்கு புற்றுநோய் இருந்ததாலும், அவர் தாக்கல்செய்திருந்த அசல் வழக்கு எண்.80/2011 வழக்கினை வாபஸ் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளரிடம் நடைபெற்ற விசாரணையின் போது நான் மற்றும் 1ம் பிரதிவாதி வாக்குமூலம் அளித்தோம் என்றால் அளித்தோம். 1ம்பிரதிவாதி அளித்த வாக்குமூலம் நான் படித்து பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. அவரது வாக்குமூலத்தில் தனக்கு புற்றுநோய் இருப்பதால் மேற்கோண்டு அசல் வழககு எண்.80/2011 வழக்கினை நடத்த விரும்பவில்லை என்று சொல்லி இருந்தார் என்றால் சொல்லி இருக்கலாம். 1ம் பிரதிவாதி தனது புற்றுநோய் சிகிச்சைக்கு பணம்தேவைபட்டதால் தனக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கு சொத்தில் பகுதி சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்தினை தீர விசாரித்து சட்ட கருத்துரை பெற்று தகுந்த பிரதிபிரயோஜனம் கொடுத்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, சொத்தினை அபகரிக்கும் நோக்கில் போலியாக கிரைய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது.

9. 2ம்பிரதிவாதி கிரையம் பெற்ற நாள்முதல் தாவாசொத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து குடியிருப்பு வீடு அல்ல என்றாலும், அது காலி நிலமாக உள்ளது என்றாலும் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற நாள்முதல் தாவாசொத்தில் கூட்டு

சுவான்தாரர் என்ற அடிப்படையில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதால் கூட்டு சுவான்தாருக்கு எதிராக நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி கிரையம் செய்துகொடுத்த, 1ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியம் இருந்ததினால் அவரிடம் இருந்து 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு எனன் உரிமை உள்ளததோ அதே உரிமை 2ம் பிரதிவாதிக்கும் சித்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகம் பாத்தியத்தில் 2ம் பிரதிவாதி எந்தவித உரிமையும் கோராத பட்சத்தில் இந்த வழக்கிற்கான வழக்கு மூலமே எழவில்லை என்றால் சரியல்ல.

10. நான் உண்மையான சங்கதிகளை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாலும், சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தினை அணுகாததாலும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் கூறும் சங்கதிகள் ஒன்றோடொன்று முரண்பட்டு இருப்பதால் எனது வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் அனைத்தும் கற்பனையாக இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஒன்று என்றாலும், ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.